# புலவர் ராசுவின் நூல்கள் வெளியீடு

ஈரோடு, ஜூலை 30: கொங்கு ஆய்வு மையத்தின் சார்பில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் புலவர்ராசு எழுதிய 5 நூல்களின் வெளியீட்டு விழா ஈரோட்டில் நேற்று நடந்தது.

விழாவில் கண்ணுசாமி வரவேற்றார். நூல்களை ஸ்டாலின் குணசேகரன் அறிமுகம் செய்து வைத்து பேசினார். 'காளிங்கராயன் கால்வாய்' என்ற நூலை மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட ஈஸ்வரன், ராஜமாணிக்கம் பெற்று கொண்டனர். இதை தொடர்ந்து மத்திய அமைச்சர் சுப்புலட்சுமிஜெகதீசன் பேசியதாவது;

'காளிங்கராயன் கால்வாய்' என்ற நூலின் மூலம் கொங்கு மக்களின் பண்பாட்டை பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து கொண்டு பழங்காலத்திலேயே சேவை புரிந்தவர் காளிங்கராயன் என்பதை அடுத்த தலைமுறையினரும் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த புத்தகத்தை தொகுத்து அளித்துள்ள விதம் மிகவும் கவர்ந்தது என்றார்.

'ஈரோடு மாவட்ட வரலாறு' என்ற நூலை கைத்தறி அமைச்சர் ராஜா வெளியிட கே.எஸ்.ரங்கசாமி, மாரிமுத்து பெற்று கொண்டனர்.

'ஈரோடு மாவட்ட கல்வெட்டுகள்' என்ற நூலை அமைச்சர் சாமிநாதன் வெளியிட நெல்லை நெடுமாறன், சங்கரநாராயணன் பெற்று கொண்டனர்.

'கொங்கு வேளாளர் கல்வெட்டும், காணிப்பாடல்களும்' என்ற நூலை முன்னாள் அமைச்சர் துரைராமசாமி வெளியிட்டார்.

'கொங்கு வேளாளர் செப்பேடு பட்டயங்கள்' நூலை பழனி தொகுதி எம்.பி., கார்வேந்தன் வெளியிட ராமசாமிகவுண்டர், தனியரசு ஆகியோர் பெற்று கொண்டனர். விடியல்சேகர் எம்.எல்.ஏ., யு.ஆர்.சி. தேவராஜ், வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சந்திரசேகரன், தமிழ்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர். நூலாசிரியர் புலவர் ராசு ஏற்புரை வழங்கினார்.

கொங்கு கொளந்தசாமி நன்றி கூறினார்.